11th March 1966]

ஜமீன் ஒழிப்புச் சட்டம்

*244 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஜமீன் ஒழிப்பு சட்டத்தின்படி சர்க்காரால் எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் பூர்த்தியாகாமல் இருக்கும் கிராமங்கள் எத்தனை?

(இ) தாமதத்திற்கான காரணம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (a) Six (6).

(b) Proceedings questioning the tenure of the estates are pending before the Special Appellate Tribunal (High Court) Madras or the Supreme Court of India.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்டிலே சில கிராமங்கள் விஷயத்தில் சர்க்காருக்குச் சாதகமாக தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அப்படியிருந்தும்கூட செட்டில்மெண்ட் ஆபீசர் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. எந்தெந்த கிராமங்களில் அப்படிச் செய்யப்பட்டது? இராமனுதபுரத்திலே அம்மாதிரி செய்யப்பட்டதா?

கனம் திரு. வெ. ராமையா: இராமனுதபுரத்தைப் பொறுத்த வரை தென்கரை, செவ்வூர் போன்ற பகுதிகளுக்குத்தான் தீர்ப்பு கூறப்பட்டது. சர்க்கார் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. செ. மாதவன்: இராமநாதபுரம் மாவட்டம் தென்கரை கிராமத்தைச் சேர்ந்த வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்று, ஹைக்கோர்ட் தீர்ப்பை எதிர்த்து, சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொள்ளப்பட்டு, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பும் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பாக வந்துவிட்டது. அதன் பேரில் அரசாங்கத்திற்கு ரெப்ரசென்டேஷன் செய்து கொண்டிருந்தும் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் சிவில் கோர்ட்டுக்குச் சென்று வார்த்தை வாங்கக் கூடிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. சர்க்கார் அதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. வெ. ராமையா: சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்குப் பிறகு சர்க்கார் எத்தகைய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவற்றை எடுத்துக்கொண்டு வருகிறது. எங்காவது சிக்கல் இருக்குமானால் அதை கனம் அங்கத்தினர் அரசாங்கத்திற்கு எழுதி அனுப்பினால் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

*245 *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Food be pleased to state how many writs have been filed in the High Court as on 31st December 1965 questioning the validity of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963)?

THE HON. SRI V. RAMAIAH: 235 writ petitions have been filed in the High Court as on 31st December 1965 questioning the validity of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).